RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# சங்க இலக்கியங்கள் காட்டும் வணிக தத்துவம்

பா. ஞானசௌந்தரி [அ, *]

[அ] பொருளியல் துறை, சரஸ்வதி நாராயணன் கல்லூரி, மதுரை-22, இந்தியா

# Trade, Ethics, and Economic Life in Sangam Literature

P. Gnanasoundari [a, *]

[a] Department of Economics, Saraswathi Narayanan College, Madurai-22, India

* Corresponding Author:
p.soundarya8121@gmail.com

**ABSTRACT**

Sangam literature represents one of the oldest and most significant bodies of classical literature in the Tamil language. These literary works portray commerce not merely as an occupation or means of earning wealth, but as an economic activity that should be conducted in accordance with ethical principles and social responsibility. The pursuit of material prosperity was recognized as an important aspect of life, reflected in the traditional idea of seeking wealth even by travelling across the seas. Trade emerged as an attractive and significant occupation in Sangam-age Tamil society. The presence of foreign merchants and overseas traders in Tamil regions is suggested by references to interactions between different peoples and communities. The well-known ideal expressed through the concept of "Yadhum Ure, Yāvarum Kelir"—"Every place is our town; everyone is our kin"—also reflects an inclusive worldview that facilitated cultural and commercial interactions beyond territorial boundaries. Sangam literature also provides evidence of the barter system, through which goods were exchanged directly between producers, traders, and consumers. In addition, the literary sources indicate that imports and exports were actively carried out in Tamil regions. Maritime trade and commercial networks connected Tamil society with wider regions, contributing to economic prosperity and cultural exchange. This article examines the philosophy of commerce reflected in Sangam literature, focusing on the ethical foundations of trade, the pursuit of wealth, barter practices, foreign merchants, and import–export activities. The study highlights the relationship between commerce, morality, social interaction, and economic development in ancient Tamil society, demonstrating that Sangam literature provides valuable insights into the commercial thought and economic culture of the period.

**Keywords:** Economic Life, Sangam Literature, Tamil language

## முன்னுரை

பண்டைய தமிழர்கள் பொருளாதாரத்தையும் உழைப்பையும் உயர்வாக கொண்டு வாழ்ந்தார்கள் திரை கடல் ஓடியும் திரவியம் தேடு என்றவாறு உழைக்கச் சென்றனர். உழைத்து உற்பத்தியைப் பெருக்கினர். தன்னிறைவுடன் வாழ்ந்து செல்வத்தைப் பெருக்கினர். வணிகத் தொழிலும், அதன் மூலம் தொழில் வாய்ப்புகளும் பெருகி தமிழகத்தில் தொழில் வளர்ச்சி சிறப்பாக இருந்ததை சங்க இலக்கியங்கள் மூலம் அறிய முடிகிறது சங்க இலக்கியங்கள் காட்டும் வணிக தத்துவத்தை இக்கட்டுரையில் காணலாம்.

## பண்டமாற்று முறை

உற்பத்தி செய்த பொருட்களை தங்களின் தேவைப் பூர்த்தி ஆன பிறகு மிஞ்சும் பொருட்களை பிறரிடம் மாற்றி தமக்குத் தேவையான பொருள்களை வாங்கி உள்ளதை சங்க இலக்கியங்கள் படம் பிடித்து காட்டுகிறது இவை பண்டமாற்று முறை எனப்படுகிறது.

## சங்க இலக்கியங்களில் வணிகம்

சங்ககால மக்கள் அரிசி, பருப்பு, உப்பு, இறைச்சி போன்ற பொருட்களை பண்டமாற்று முறையிலேயே பெற்றுக் கொண்டனர் என்பதை,

"பாலோடு வந்து கூழொடு பெயரும்

ஆடுடை இடை மகள்" (குறுந்தொகை-221)

என்றும்,

"உப்பை மாறி வெண்ணெல் தரீஇய

உப்பு வினை கழள்சென்றனள்" (குறுந்தொகை-269)

என்றும் குறுந்தொகைச்சுட்டுகிறது.

மேலும்,

"கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்

மான் தசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்

தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய "

ஏரின் வாழ்நர் பேரில் அறிவையர்

குலக்கில் விளைந்த களக்கொள்

வெண்ணெல்

முகத்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும் "(புறநானூறு-33)

என்று புறநானூற்று பாடல்கள் வழி அறியலாம்.

வணிகமும்- அறமும்

பண்டையத் தமிழர்கள் வணிகத்தை அறத்தோடு மேற்கொண்டுள்ளனர். செல்வத்தை எப்படியும் பெறலாம் என்ற நோக்கோடு அல்லாமல் அறவழியில் தான் செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்று வாழ்ந்ததை.

"இம்மைச் செய்தது மறுமைக்கும் ஆம் எனும்

அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்" (புறநானூறு-134)

சங்க இலக்கியங்களில் ஏற்றுமதியும் இறக்குமதியும்

சங்க காலத்தில் எகிப்து கிரேக்கம் ரோம் முதலிய நாடுகளுடன் வாசனை திரவியம், தந்தங்களையும் முத்துக்களையும் ஏற்றுமதி செய்தும் தங்களுக்குத் தேவையானப் பொருள்களை இறக்குமதி செய்ததை,

"நீரினின்றும் நிலத்து ஏற்றவும்

நிலத்தினின்று நீர் பரப்பும்

அளந்து அறியாப் பல பண்டம்

வரம்பு அறியாமை வந்து ஈண்டி" (பட்டினப்பாலை -129_132)

பட்டினப்பாலையும்,

"எவனர் தந்த விலை மாண் நல் கலம்

பொன்னோடு வந்து கறியோடு பெயரும்"

என அகநானூறு பாடல்கள் வழி அறிய முடிகிறது.

சங்க காலத்தில் வணிகம் மிகச்சிறப்பாக நடைபெற்றதை அறியவும் பகல் இரவு கடைகள் செயல்பட்டதை அறிய முடிகிறது. முத்துக்கள் உணவு பொருட்கள் சிறப்பாக விற்கப்பட்டதை,

"கோடு போழ் கடைஞரும் திருமணிக குயினரும்

சூடுறு நன்பொன் சுடர் இழை புனைநரும்" (மதுரைக்காஞ்சி -511-512)

மேலும்,

"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி

நெல்லோடு வந்த வல்வாய் பஃறி (பட்டினப்பாலை -29-30)

பட்டினப்பாலைவழி அறிய முடிகிறது.

இவ்வாறு பண்டமாற்று முறைகளும் வணிகம் நடைபெற்றாலும் அது அறம் சார்ந்த நடைபெற்றதை அறிய முடிகிறது. நமது பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் பெருமைச் சேர்க்கும் விதமாகவே தமிழர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது திண்மை.

## திரைகடல் ஓடியும் திரவியம் தேடு

வாழ்வதற்கு இப்பொருள் வேண்டும் என்ற எண்ணம் நம் அனைத்து உள்ளங்களிலும் உலாவிக்கொண்டே இருக்கும். நம் வாழ்க்கை பொருளால் ஆனது, பொருள் நிறைந்தது, நாட்டின் வளர்ச்சியில் தொழில்கள் சிறப்பிடம் பெறுகிறது அதன் காரணமாகவே சங்க இலக்கியங்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது.

## வணிகர்களின் மாண்பு

பல தொழிலை செய்யும் மக்கள் சேர்ந்து வாழ்ந்தனர். தொழில்முறையில் உயர்வு தாழ்வு என்ற வேறுபாடு இல்லை. நாட்டின் வளர்ச்சிக்கும், மக்களின் வாழ்விற்கும் தங்களின் உழைப்பும் மிகவும் முக்கியம் என்ற உணர்வோடு நேர்மையாக தொழில் செய்தனர்.

## முடிவுரை

சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் வணிகச் சிறப்பை மிகத் தெளிவாக பதிவு செய்துள்ளன. உள்நாட்டு வணிகமும் வெளிநாட்டு வணிகமும் திறம்படச் செயல்பட்டு வந்தன இவ்வணிகம் ஒரு அறத்தோடு நடைபெற்றது என்பதை தெளிவாக அறிய முடிகிறது.

## References

Subramanian, S.V. (2003) Sanga Ilakkiyam Pathupattu - Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India

Swaminatha Iyer, U.V., (2014), Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License